

ක්‍රීඩා හා යෞවන කටයුතු අමාත්‍යාංශය

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

Ministry of Sports and Youth Affairs

ජාතික ක්‍රීඩා අරමුදල

தேசிய விளையாட்டு நிதி

National Sports Fund

2022

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்	விபரம்	பக்க இலக்கம்
01	அறிமுகம்	03
02	நோக்கு, பணிக்கூற்று	03
03	விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்	04
04	சட்டப் பின்னணி	04
05	விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்தல்	05
06	விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி அளித்தல்	05
07	விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் பொருட்டு நிதியுதவியினை அளித்தல்	05
08	ஏனைய செலவினங்கள்	06
09	நன்றி நவிலல்	07
10	தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள்	08-031
11	கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை	32-39

தேசிய விளையாட்டு நிதியம்
வருடாந்த அறிக்கை - 2022

அறிமுகம்

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரை காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

நோக்கு

விளையாட்டு வீர வீராங்கனைகளின் இயலுமைகளை விருத்தி செய்தல்

பணிக்கூற்று

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கள் தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிக்கூற்றாகும்

தேசிய விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்

விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக இலங்கையின் விளையாட்டினது அபிவிருத்தியின் பொருட்டு விளையாட்டுடன் தொடர்புடைய மானிட வளங்களான விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் அவ்வாறே விளையாட்டுத்துறையின் பௌதீக மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டு காணப்படும் நிதியேற்பாட்டின் கீழ் நிதியானது வழங்கப்படுதல் நிகழ்த்தப்படுகின்றது.

தற்காலத்தில் விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மேலே குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக காலத்திற்குப் பொருந்தும் விதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது சர்வதேசப் போட்டி வெற்றிகளின் பொருட்டு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், இனங்காணப்பட்டுள்ள நியதிகளின் கீழ் மாதாந்தம் வீரர்களின் பொருட்டு போசணைக் கொடுப்பனவுகளை வழங்குதல், விளையாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட விஷேட வேண்டுகோள்கள் தொடர்பாக வழங்கப்படும் கொடுப்பனவுகள், தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமுடைய விளையாட்டு விழாக்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரிசு அன்பளிப்புக்களை வழங்குதல், விஷேட அளிப்புக்கள் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் தொடர்பாக நிகழ்த்தப்படும் விளையாட்டு விழாக்களின் பொருட்டான கொடுப்பனவுகள், விளையாட்டு வீரர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும்போது / விளையாட்டிலிருந்து விடைபெறும்போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமடைய விளையாட்டு உபகரணங்கள் தொடர்பாக விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் தொடர்பாக பல்வேறுபட்ட அணிகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், கருணை அடிப்படையிலான காரணங்களுக்காக விளையாட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தியினை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் வேறு கொடுப்பனவுகள் என்பனவாகும்).

சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தினால் தேசிய விளையாட்டு நிதியம் தாபிக்கப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறக்கூடிய நிதி, வெளிநாடொன்றிலிருந்து கிடைக்கப்பெறும் உதவி நிதி, யாதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு விழா தொடர்பாக அனுசரணையினை வழங்குதலின் பொருட்டு யாதேனும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி, யாரேனும் நபர் ஒருவரிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பபெறும் நிதி, வேறு யாதேனும் வழிகளால் கிடைக்கப்பெறும் நிதிகள் இந்நிதியத்திற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடிய நிதியளவுகள் இலங்கையில் யாதேனும் விளையாட்டொன்றிற்கு ஊக்கமளித்தல், முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் பொருட்டும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு கருணை அடிப்படையிலான கொடுப்பனவுகளாகவும், முதலீடு செய்வதன் பொருட்டும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் அல்லது வலுப்படுத்தும் பணிகளின் பொருட்டும் நிதியத்தினால் பணத்தினைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்தல்

தற்போது விளையாட்டில் ஈடுபட்டுள்ள தேசியமட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் மனத்திடத்தினை விருத்தி செய்வதற்கும் மற்றும் உடற்றகைமையினை உகப்பான மட்டத்தில் பேணிச் செல்லுவதனை இலக்காகக் கொண்டும் நிதியுதவியானது அளிக்கப்பட்டது. மேலும், இலங்கையின் நாமத்தினை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றமை மற்றும் விளையாட்டுத்துறையின் பொருட்டு ஆற்றப்பட்ட மிகச் சிறப்பான பணியின் பொருட்டும் போட்டித் தன்மை மிக்க விளையாட்டிலிருந்து விடைபெறும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் கொடுப்பனவுகளானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக போசணைக் கொடுப்பனவு	2,601,004.00
2.	முன்னாள் விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பான கொடுப்பனவு	700,000.00
	மொத்தம்	**3,301,004.00**

விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி அளித்தல்

2022 ஆம் வருடத்தினுள் இலங்கையினுள் நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் பங்களிப்பானது கீழே தரப்பட்டுள்ளது. குறிப்பாக 2022 ஆம் வருடம் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழாவின் பொருட்டு பங்குபற்றிய விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டுச் சம்மேளனங்கள் 09 இற்குரிய விளையாட்டு வீர வீராங்கனைகள் அதன் பொருட்டு பங்குபற்றுவதற்கு செலவாகிய தொகையானது பெற்றுக் கொடுக்கப்பட்டது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	சர்வதேசப் போட்டிகள்	79,053,719.00
	மொத்தம்	**79,053,719.00**

பயிற்றுவிப்பாளர்களுக்கு நிதி உதவி அளித்தல்

தற்போது விளையாட்டில் ஈடுபட்டுள்ள தேசியமட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஆற்றுகையினை விருத்தி செய்து தேசிய விளையாட்டுத்துறையினை உயர்த்தும் நோக்கில் நிறைவேற்றிய சேவையின் பொருட்டு பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக நிதியுதவியானது அளிக்கப்பட்டது. மேலும், 22 ஆவது பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் பொருட்டு பங்குபற்றி வெற்றியீட்டிய விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாகவும் மேற்படி விளையாட்டு வீர வீராங்கனைகளை அவ் வெற்றிகளை நோக்கி இட்டுச் சென்றமைக்காக

அவர்களது பயிற்றுவிப்பாளர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதன் பொருட்டு நிதி ரீதியிலான அன்பளிப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	போட்டிகளில் வெற்றியீட்டிய விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாகக் கொடுப்பனவு	83,151,500.00
	மொத்தம்	**83,151,500.00**

ஏனைய செலவினங்கள்

2022 ஆம் வருடத்தினுள் தேசிய விளையாட்டு நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளின் பொருட்டு செலவினத்தை மேற்கொள்ளல் மற்றும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட சேவையின் பொருட்டு கொடுப்பனவினை மேற்கொள்ளல், தேசிய விளையாட்டுச் சபையின் உறுப்பினர்களுக்குரிய மாதாந்த கொடுப்பனவினை மேற்கொள்ளல், தேசிய விளையாட்டுச் சபையில் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பொருட்டு அவர்களது மாதாந்த சம்பளங்கள், கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களது அனுமதியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் என்பனவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1	நிர்வாகச் செலவினங்கள் (தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக)	183,000.00
2	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	209,500.00
3	தேசிய விளையாட்டுச் சபை	415,667.00
4	ஏனைய கொடுப்பனவுகள்	547,490.00
5	கணக்காய்வுக் கட்டணம்	361,818.00
	மொத்தம்	**1,717,475.00**

நன்றி நவிலல்

தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களின், விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களது மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலினை மிக மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

K. மகேசன்
செயலாளர்
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியம்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூ.

பாதீடு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021 மீளளிக்கப்பட்ட வருமானம்
-	**வருமானப் பெறுகைகள்**			-
54,050,967	1 - அரசாங்க நன்கொடைகள்	**3.1**	119,063,017	190,020,300
	2 - முதலீடு	**3.2**	1,291,057	1,154,400
279,618,090	3 - ஏனைய வருமானங்கள்	**3.3**	279,618,089	21,474,465
333,669,057	**மொத்த வருமானப் பெறுகைகள்**		399,972,163	212,649,165
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-
-	4 - வைப்புகள்	**3.4**	330,000	-
-	ஏனைய பெறுகைகள்			
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்**		**330,000**	-
333,669,057	**மொத்த வருமானப் பெறுகைகளும்**		**400,302,163**	**212,649,165**
	கழி : செலவினம்			
-	**மீண்டுவரும் செலவினம்**			
75,000,000	5.1. - முதலீடு			
201,148,519	6.1. - விளையாட்டுப் போட்டிகள்	**4.1**	201,148,519	108,145,941
3,895,904	6.2. - நலன்புரிக் கொடுப்பனவுகள்	**4.2**	3,895,904	9,787,005
-	6.3. - அபிவிருத்தி செயற்றிட்டம்			
300,000	6.4. - இயலுமை விருத்தி	**4.3**	300,000	71,055,500
1,804,978	6.5 - நிர்வாகச் செலவினம்	**4.4**	1,767,475	11,194,117
282,149,401	**மொத்த மீண்டுவரும் செலவினம்**		**207,111,898**	**200,182,563**
	மொத்தச் செலவினம்		**207,111,898**	**200,182,563**
51,519,656	**2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மிகை / பற்றாக்குறை**		193,190,265	12,466,602

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :

.....

பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

தேசிய விளையாட்டு நிதியம்

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2022	2021 மீளளிக்கப்பட்ட
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			
நிதி சொத்துக்கள்			
முதலீட்டுக் கணக்கு	5	91,938,363	16,089,059
நிதி நிலுவை	6	67,307,526	15,787,870
பல்வகைக் கடன்படுநர்	7	95,724,700	30,270,897
மொத்த சொத்துக்கள்		254,970,589	62,147,826
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்	-		
திரண்ட நிதியம்	8	254,798,589	61,608,323
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நானாவித வைப்புகள்	9	-	330,000
திரட்டிய செலவினம்	10	172,000	209,503
நடைமுறைப் பொறுப்புக்கள்		172,000	539,503
மொத்தப் பொறுப்புக்கள்		254,970,589	62,147,826

பக்க இலக்கம் ....01... முதல் ...03.. வரையுள்ள படிவங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் பக்க இலக்கம் ...04.... முதல் ...20.... வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் கணக்குப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:
பதவி :	திகதி :
திகதி :	

தேசிய விளையாட்டு நிதியம்
2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022	2021 மீளளிக்கப்பட்ட
	ரூபா	ரூபா
வருடத்தின் மிகை	193,190,265	12,466,602
	193,190,265	12,466,602
முதலீட்டு வட்டியினை மேலதிகமாகக் கணக்கிடல்		-
கணக்காய்வு கட்டணத்தினை மேலதிகமாக ஒதுக்கீடு செய்தல்		
நிதியல்லாத மாற்றங்கள்	-	-
	-	
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>	-	
கடன்படுநர் குறைவடைதல் / அதிகரித்தல்	65,453,803	12,301,010
பல்வேறுபட்ட வைப்புக்கள் குறைவடைதல் / அதிகரித்தல்	(330,000)	(10,000)
பல்வேறுபட்ட கடன்பட்டோர் குறைவடைதல் / அதிகரித்தல்	37,503	(62,503)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	65,161,306	12,228,507
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
நிலையான வைப்புக்கள் அதிகரித்தல்	(75,849,304)	(1,443,594)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	(75,849,304)	(1,443,594)
நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவற்றின் தேறிய அதிகரிப்பு	51,519,656	(1,225,499)
காலப்பகுதியின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவை	15,787,870	17,013,369
காலப்பகுதியின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவை	67,307,526	15,787,870

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

.....
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

நிதிக் கூற்றுகள் தொடர்பாகக் குறிப்புகள்

1 அறிமுகம்

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரையுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

2 கணக்குகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை

2.1 இணக்கப் பிரகடனம்

விளையாட்டு நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதிச் செயலாற்றகைக் கூற்று, நிதி நிலைமை தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாயில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 அறிக்கையிடும் காலப்பகுதி

2022 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2022 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியானது இந் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய அறிக்கையிடும் காலப்பகுதியாகும்.

2.4 நிதிக் கூற்றுக்களின் முந்தைய வருடப் பெறுமானங்களின் ஒப்பீட்டு மறுசீரமைப்பு

2021 இல் அடையாளம் காணப்பட்ட வித்தியாசங்கள் 2021 கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டு சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் கூறப்பட்டுள்ளன.

2.5 திரட்டல் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன

3 வருமானம் கிடைக்கப்பெறல் தொடர்பாகக் குறிப்புகள்

குறிப்பு 03.1 - அரசாங்க நன்கொடைகள்

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
1		அரசாங்க நன்கொடைகள்		
1	1	நன்கொடைகள்	29,050,967	177,125,000
1	2	வருமானம் – தேசிய லொத்தர் சபை	90,012,050	12,895,300
			119,063,017	**190,020,300**

குறிப்பு 03.2 - முதலீடு

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
2		முதலீடு		
2	1	நிலையான வைப்பினை மீளப்பெறல்		
2	2	நிலையான வைப்பு மீதான வட்டி	1,291,057	1,154,400
			1,291,057	**1,154,400**

குறிப்பு 03.3 - ஏனைய வருமானங்கள்

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
3		ஏனைய வருமானங்கள்		
3	1	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி		-
3	2	அனுசரணைப் பெறுகைகள்	279,561,638	20,875,000
3	3	ஏனைய வருமானத்துடன் சரிசெய்தல்	56,452	599,465
			279,618,089	**21,474,465**

குறிப்பு 03.4 - வைப்புகள்

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
4		வைப்புகள்		
4	1	வைப்புப் பெறுகைகள்	330,000	

4	2		ஏனைய	
				330,000 -

4 செலவினங்கள் தொடர்பான குறிப்புகள்

குறிப்பு 4.1 - விளையாட்டுப் போட்டிகள்

செலவினக் குறியீடு			கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
6	1		விளையாட்டுப் போட்டிகள்		
6	1	1	உள்நாட்டுப் போட்டித் தொடர்கள்	38,943,300	-
6	1	2	சர்வதேசப் போட்டித் தொடர்கள்	79,053,719	108,145,941
6	1	3	பயிற்றுவிப்பாளர்கள்	83,151,500	-
				201,148,519	**108,145,941**

குறிப்பு 4.2 - நலன்புரிக் கொடுப்பனவுகள்

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
6	2			நலன்புரிக் கொடுப்பனவு		
6	2	1		விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாக		
6	2	1	1	விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான போசணைக் கொடுப்பனவு	2,601,004	8,215,107
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	700,000	631,898
6	2	1	3	ஏனைய	594,900	
				விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவி		-
				விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள்		-
				விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு		-
6	2	2		பயிற்றுவிப்பாளர் தொடர்பாக		
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	-	940,000
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்	-	

					3,895,904	**9,787,005**

குறிப்பு 4.3 - இயலுமை விருத்தி

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
6	4			செயலாற்றுகை		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	150,000	55,655,500
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	150,000	15,400,000
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
					300,000	**71,055,500**

குறிப்பு 4.4 - நிர்வாகச் செலவினம்

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
6	5			நிர்வாகச் செலவினம்		
6	5	1		பொது நிர்வாகச் செலவினம்		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	183,000	363,500
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	361,818	150,000
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவுகள்		
6	5	1	4	ஏனைய	547,490	10,118,170
6	5	2		விளையாட்டு நிர்வாகச் செலவினம்		
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	209,500	212,258
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	415,667	350,190
6	5	2	4	பயிலுநர்கள் தொடர்பாக கொடுப்பனவு	50,000	
					1,717,475	**11,194,118**

5 முதலீடு

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	16,089,059	14,645,465
வருடத் தொகுப்பு	75,000,000	32,000,000
வருடத்தில் அகற்றுதல்	-	32,000,000
வட்டி	849,304	1,443,594
இறுதி நிலுவை	**91,938,363**	**16,089,059**

6 காசுப் பாய்ச்சல் தொடர்பாக குறிப்பு

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	15,787,870	17,013,369
வருடப் பெறுகைகள்	333,669,056	231,208,111
வருடத்தில் கொடுப்பனவு	282,149,401	232,433,610
இறுதி நிலுவை	**67,307,526**	**15,787,870**

7 பல்வகைக் கடன்படுநர்

குறிப்பு 7.1 - தேசிய லொத்தர் சபை

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	29,421,593	16,526,293
வருட வருமானம்	90,012,050	12,895,300
சரிசெய்தல்		-
திறைசேரியிலிருந்து கிடைப்பனவு	25,000,000	-
இறுதி நிலுவை	**94,433,643**	**29,421,593**

குறிப்பு 7.2 - நிலையான வைப்பு வட்டி

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	849,304	1,443,594
வருட வட்டி	1,341,810	1,109,881
வருடத்தில் அகற்றுதல்	-	
இறுதி நிலுவை	**1,291,057**	**849,304**

8 உரிமையாண்மை மாற்றமடைதலின் கூற்று

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
2022.01.01 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	61,608,323	49,141,721
2022 ஆம் வருடத்தில் பற்றாக்குறை / மிகை	193,190,265	12,466,602
ஏனைய சரிப்படுத்தல்கள்	-	-
2022.12.31 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	**254,798,589**	**61,608,323**

9 நானாவித வைப்புகள்

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	330,000	340,000
வருடப் பெறுகைகள்	-	-
வருமானத்திற்கு மாற்றல்	330,000	10,000
இறுதி நிலுவை	**-**	**330,000**

10 திரட்டிய செலவினம்

விபரம்	2022 ரூ. சதம்	2021 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	209,503	147,000
வருடத் தொகுப்பு	172,000	209,503
வருடத்தில் கொடுப்பனவு	209,503	147,000
இறுதி நிலுவை	172,000	209,503

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

இணைப்பு – 01

தேசிய விளையாட்டு நிதியம்
2022.12.31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக நிலுவை வெளிப்பாடுகள்

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	பேரேட்டுப் பக்க இல.	பற்று	வரவு
						ரூ	ரூ
				திரண்ட நிதியம் - 2022.01.01 ஆம் திகதிக்கு	01		61,608,323
				முதலீட்டுக் கணக்கு	02	91,938,363	
1	1			நன்கொடைகள்	03		29,050,967
1	2			வருமானம் - தேசிய லொத்தர் சபை	04		90,012,050
1	2			கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் - தேசிய லொத்தர் சபை	04	94,433,643	
2	2			நிலையான வைப்பு வட்டி	02		1,291,057
2	2			கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி	02	1,291,057	
3	2			அனுசரணைக் கிடைப்பனவு	05		279,561,638
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	06		56,452
4	1			வைப்புக் கணக்கு	07		330,000
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்	08	38,943,300	
6	1	2		சர்வதேசப் போட்டிகள்	09	79,053,719	
6	1	3		பதக்கங்களை வெற்றியீட்டியோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு	10	83,151,500	
6	2	1	1	விளையாட்டு வீரர்களுக்கான போசணைக் கொடுப்பனவு	11	2,601,004	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	12	700,000	
6	2	1	3	பதக்கங்களை வெற்றியீட்டியோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு	13	594,900	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	14	-	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்	15	-	
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	17	150,000	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	18	150,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி	19		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	20	183,000	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	21	361,818	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு	21		172,000
6	5	1	4	ஏனைய	22	547,490	
6	5	1	4	ஏனைய - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய	22		
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	23	209,500	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	24	415,667	

6	5	2	4	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	25	50,000	
				நிதி நிலுவை		67,307,526	
						462,082,486	**462,082,486**

.....
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

இணைப்பு - 02

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக கிடைப்பனவு கொடுப்பனவுக் கணக்கு

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	கிடைப்பனவு 2022	கிடைப்பனவு 2022
					ரூ	ரூ
				சனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை		15,787,870
1	1			நன்கொடைகள்	29,050,967	
1	2			வருமானம் – தேசிய லொத்தர் சபை	25,000,000	
2	1			நிலையான வைப்புக்களை மீள எடுத்தல்	-	
2	2			நிலையான வைப்புகளுக்கான வட்டி	-	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		
3	2			அனுசரணைக் கிடைப்பனவு	279,561,638	
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	56,452	
4	1			வைப்புகள் கிடைக்கப்பெறல்	-	
4	2			ஏனைய		
						333,669,056
				கிடைப்பனவு மொத்தம்		**349,456,927**

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	2022 கொடுப்பனவு	2022 கொடுப்பனவு
5	1			முதலீட்டுத் திட்டங்கள்	75,000,000	
6	1	1		தேசிய போட்டித் தொடர்	38,943,300	
6	1	2		சர்வதேச போட்டிகள்	79,053,719	

6	1	3		பதக்கங்களை வெற்றியீட்டியோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு	83,151,500	
6	2	1	1	விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு	2,601,004	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	700,000	
6	2	1	3	ஏனைய	594,900	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு		
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்	-	
6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	150,000	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	150,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	183,000	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	339,818	
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவுகள்	-	
6	5	1	4	ஏனைய	606,993	
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	209,500	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	415,667	
6	5	2	4	பயிலுநர்கள் தொடர்பான கொடுப்பனவு	50,000	
				மொத்தம்		**282,149,401**
				டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலுவை	-	**67,307,526**

.....

பிரதான கணக்காளர்

பெயர்:

திகதி :

இணைப்பு - 03

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடம் தொடர்பாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கு

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2022	வருமானம் 2022
					ரூ	ரூ
1	1			நன்கொடைகள்	29,050,967	
1	2			வருமானம் – தேசிய லொத்தர் சபை	90,012,050	
2	1			நிலையான வைப்புக்களை மீள எடுத்தல்		
2	2			நிலையான வைப்புகளுக்கான வட்டி	1,291,057	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		
3	2			அனுசரணைக் கிடைப்பனவு	279,561,638	
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	56,452	
4	1			வைப்புகள் கிடைக்கப்பெறல்	330,000	
4	2			ஏனைய		
				மொத்த வருமானம்		**400,302,163**

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	2022 செலவினம்	2022 செலவினம்
5	1			முதலீட்டுத் திட்டங்கள்		
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்	38,943,300	
6	1	2		சர்வதேச போட்டிகள்	79,053,719	
6	1	3		பதக்கங்களை வெற்றியீட்டியோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு	83,151,500	
6	2	1	1	விளையாட்டு வீரர்களுக்கான போசணைக் கொடுப்பனவு	2,601,004	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	700,000	
6	2	1	3	ஏனைய	594,900	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	-	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்	-	

6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	150,000	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	150,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலமை விருத்தி		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகச் செலவினம்	183,000	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	361,818	
6	5	1	4	ஏனைய	547,490	
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	209,500	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	415,667	
6	5	2	4	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	50,000	
				மொத்தம்		**207,111,898**
				மிகை	**-**	**193,190,265**

.....

பிரதான கணக்காளர்

பெயர்

திகதி

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாதீட்டினையும் உண்மையான செலவினத்தினையும் ஒப்பிடல்

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	திருத்தப்பட்ட மதிப்பீடு	உண்மை	வித்தியாசம்	வித்தியாசம் ஆரம்ப செலவின மதிப்பீட்டின் % ஆக	வித்தியாசத்திற்கான காரணம்
					ரூ.	ரூ.	ரூ.		
				கிடைப்பனவு					
1	1			நன்கொடைகள்	18,000,000	29,050,967	11,050,967	61	குறைநிரப்பு பாதீட்டின் வாயிலாக நிதியேற்பாடு கிடைக்கப் பெறல்
1	2			வருமானம் – தேசிய லொத்தர் சபை	25,000,000	25,000,000	-	-	
1	3			ஏனைய	-	-	-	-	
2	1			நிலையான வைப்புக்களை மீளப்பெறல்	-	-	-	-	
2	2			நிலையான வைப்பு வட்டி	-	-	-	-	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு	-	-	-	-	
3	2			அனுசரணைக் கிடைப்பனவு	279,504,788	279,561,638	56,850	-	
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	390,000	56,452	(333,548)	(86)	தேவைப்பாடுகள் எழாமை
4	1			வைப்புக்கள் கிடைப்பனவு			-	-	
4	2			ஏனைய			-	-	

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	திருத்தப்பட்ட மதிப்பீடு	உண்மை	வித்தியாசம்	வித்தியாசம் ஆரம்ப செலவின மதிப்பீட்டி % ன் ஆக	வித்தியாசத்திற்கான காரணம்
					ரூ.		ரூ.		
				கொடுப்பனவுகள்					
5	1			முதலீட்டுத் திட்டம்	75,000,000	75,000,000	-	-	
5	2			ஏனைய முதலீடுகள்					
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்	39,000,000	38,943,300	56,700	-	
6	1	2		சர்வதேசப் போட்டித் தொடர்	87,500,000	79,053,719	8,446,281	10	தேவைப்பாடுகள் வரையறுக்கப்படுதல்
6	1	3		பதக்கங்களை வெற்றியீட்டியோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவு	75,200,000	83,151,500	(7,951,500)	(11)	வெற்றிகள் அதிகரித்தமையின் காரணமாக
6	2	1	1	விளையாட்டு வீரர்களுக்கான போசணைக் கொடுப்பனவு	2,650,000	2,601,004	48,996	2	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	700,000	700,000	-	-	
6	2	1	3	ஏனைய	500,000	594,900	(94,900)	(19)	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	-	-	-	-	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்	-	-	-	-	
6	2	2	3	ஏனைய	-	-	-	-	

6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	-	-	-	-	
6	4	1		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	150,000	150,000	-	-	
6	4	2		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	150,000	150,000	-	-	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி	-	-	-	-	
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	184,000	183,000	1,000	1	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	340,000	339,818	182	-	
6	5	1	3	வைப்புக்கள் கொடுப்பனவு	-	-	-	-	
6	5	1	4	ஏனைய	610,000	606,993	3,007	-	
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	210,000	209,500	500	-	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	420,000	415,667	4,333	1	
6	5	2	4	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	50,000	50,000	-	-	

.....

பிரதான
கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 11

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 நிலையான வைப்புகள் மற்றும் நிலையான வைப்பு முதலீட்டு வட்டி

கணக்கு இலக்கம்	தொகை	ஆரம்ப திகதி	நிதியாண்டு	நாட்களின் எண்ணிக்கை	தொகை	வட்டி வீதம்	வட்டி	தக்க வைத்துக் கொள்ளல் வரி 5%	தேறிய வட்டித் தொகை
78404430	8,469,181	2022/01/01	2022/12/31	365	8,469,181	5.50%	465,805	23,290	442,515
78404516	8,469,181	2022/01/01	2022/12/31	365	8,469,181	5.50%	465,805	23,290	442,515
90054788	25,000,000	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,466	7,123	135,342
90054780	25,000,000	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,466	7,123	135,342
90054792	25,000,000	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,466	7,123	135,342
	91,938,363						**1,359,007**	**67,950**	**1,291,057**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 12

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 ஆம் திகதிக்கு பல்வகைக் கடன்படுநர்

2021 ரூ. சதம்	செலவு விடயம்			கணக்குக் குறிப்பு மற்றும் விபரங்கள்	கணக்குக் குறிப்பு	2022 ரூ. சதம்
849,304	2	2		கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்பு முதலீட்டு வட்டி	16	1,291,057 -
29,421,593	1	2		கிடைக்கப்பெற வேண்டிய தேசிய லொத்தர் சபை வருமானம்	14	94,433,643 -
30,270,897				மொத்தம்		**95,724,700**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 13

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 ஆம் திகதிக்கு முடிவடையும் வருடம் தொடர்பாக உரிமையாண்மை மாற்றமடைதலின் கூற்று

2021 ரூ. சதம் மீளளிக்கப்பட்ட	கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள்	2022 ரூ. சதம்
49,141,721	2022.01.01 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	61,608,323
12,466,602	2022 ஆம் வருடத்தில் பற்றாக்குறை / மிகை	193,190,265
61,608,323	**2022.12.31** ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	**254,798,589**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 14

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 ஆம் திகதிக்கு இறுதிக் கணக்குகள் தொடர்பான குறிப்பு

லொத்தர் வருமானம் - க.இல 041 மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய லொத்தர் வருமானம் - க.இல 017

2022 ஆம் வருடத்தில் தேசிய லொத்தர் சபையினால் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள லொத்தர் வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட தொகை.	90,012,050
2022 ஆம் வருடத்தினுள் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட தொகை	25,000,000
2022.12.31 ஆம் திகதி ஆகும் போது மேலும் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய தொகை	94,433,642

2022 ஆம் வருடத்தில் லொத்தர் வருமானம்

2022.01.01 ஆம் திகதிக்கு ஆரம்ப நிலுவை		29,421,593
மாதம்	மாதத்திற்குரிய தொகை ரூ. சதம்	
சனவரி	6,650,264	
பெப்ரவரி	6,187,436	
மார்ச்	472,428	
ஏப்ரல்	4,012,200	
மே	5,111,270	
ஜூன்	6,348,540	
ஜூலை	6,165,240	
ஓகஸ்ட்	7,227,490	
செப்டம்பர்	9,676,740	

ஒக்டோபர்	12,662,690	
நவம்பர்	10,401,590	
டிசம்பர்	15,096,162	
2022 ஆம் வருடம் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகை		**90,012,050**
மொத்தமாக அறவிடப்பட வேண்டிய தொகை		**119,433,643**
கழி – திறைசேரியிலிருந்து கிடைப்பனவு		**25,000,000**
2022.12.31 ஆம் திகதிக்கு முடிவு நிலுவை		**94,433,643**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 15

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 இல் முடிவடையும் வருடம் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய செலவினம்

தொடர் இலக்கம்	கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவரின் பெயர்	காரணம்	தொகை ரூ.
1	கணக்காய்வு தலைமையதிபதி	2022 வருடம் தொடர்பாக கணக்காய்வுக் கட்டணத்தை ஒதுக்கீடு செய்தல்	172,000.00
	மொத்தம்		**172,000.00**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

குறிப்பு - 16

தேசிய விளையாட்டு நிதியம்

2022.12.31 இற்கு கிடைக்கப் பெற வேண்டிய நிலையான வைப்பு முதலீட்டு வட்டி

கிடைக்கப் பெற வேண்டிய நிலையான வைப்பு முதலீட்டு வட்டி								
கணக்கு இலக்கம்	இருந்து	வரை	நாட்கள் எண்ணிக்கை	வட்டி கணக்கிடப்பட்ட விதம்		வட்டி	தக்க வைத்துக் கொள்ளும் வட்டி 5%	தேறிய வட்டித் தொகை
				முதலீட்டுத் தொகை	வட்டி வீதம்			
78404430	2022/01/01	2022/12/31	365	8,469,181	5.50%	465,804.98	23,290.25	442,515
78404516	2022/01/01	2022/12/31	365	8,469,181	5.50%	465,804.98	23,290.25	442,515
90054788	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,465.75	7,123.29	135,342
90054780	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,465.75	7,123.29	135,342
90054792	2022/12/23	2022/12/31	8	25,000,000	26.00%	142,465.75	7,123.29	135,342
மொத்தம்						**1,359,007.22**	**67,950.36**	**1,291,057**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

SYA/A/NSF/6/22/11

2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி

செயலாளர்,

விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவுற்ற வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கையொப்பமிடப்பட்ட கீழ்வரும் அறிக்கை மற்றும் சான்றுபடுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரதியொன்று என்பன இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

S.M.N. திலக்கரத்ன

பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

பிரதிகள் : 1. செயலாளர் - விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

2. செயலாளர் - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

SYA/A/NSF/6/22/11

2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி

செயலாளர்,

விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவுற்ற வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்தினத்தில் முடிவடையும் வருடம் தொடர்பாகவான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் அத்தினம் நிறைவடையும் வருடம் தொடர்பாக காசுப்பாய்ச்சற் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரை, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தேசிய விளையாட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் வாயிலாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை மற்றும் அத் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாக அதன் நிதிச் செயற்படுதன்மை மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கையின் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினை பிரதிபலிக்கும் என்பது நான் கொள்ளும் அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) ஏற்ப என்னால் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ்

அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்தின் பொருட்டு அடிப்படையொன்றினை வழங்கும் நோக்கில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான ரீதியில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுவதன் பொருட்டு அவசியமாக அமையப்பெறும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தேர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமையினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு எண்ணுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டாலேயொழிய தொடர்ச்சியாக நிலவும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான நிலைத்திருக்கைக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்றொடர் சம்மந்தமாக பரிசோதனை செய்யும் பொறுப்பு, ஆளும் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகுமாறு சொந்த வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஏற்றவிதமாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்பாடொன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதி வழங்குகை உயர்ந்த மட்டத்திலான உறுதி வழங்குகையாயினும், இலங்கை பொதுக் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அவை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருண்மையான வழுக் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்ளும் என்ற உறுதிப்படுத்தப்படுதலாக ஆகப் பெறாது. மோசடிகளின் மற்றும் தவறுகளின் தனி அல்லது கூட்டானதான தாக்கத்தினால் பொருண்மையான வழுக்கூற்றுக்கள் ஏற்படக் கூடியதுடன், அதன் பொருண்மைத் தன்மையானது

இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீது ஏற்படக் கூடிய தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமயங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்ரீதி மத்தியத்துவம் மற்றும் தொழில்ரீதி சிக்கனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இனங்காணல் மற்றும் மதிப்பாய்வு செய்தலின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உகந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுதலின் காரணமாக நிகழும் பொருண்மையான கூற்றுக்களினால் நிகழக்கூடிய தாக்கங்களை விட மோசடிகளால் நிகழும் தாக்கம் பாரியதாவதாக அமைவது, அவை உள்கூட்டுக்கள், போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் போன்ற காரணிகளாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை வெளியிட எண்ணாவிடினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாக உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடலின் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக விளக்கமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வ தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீது அடிப்படையாக கணக்கீடு தொடர்பாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை பற்றி அடிப்படையினை ஈடுபடுத்திக் கொள்ளுதலின் ஏற்புடைத் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் முடிவு செய்வேனாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாகவான வெளிப்படுத்தல்களுக்கு என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனத்தினைச் செலுத்த வேண்டியதுடன், அவ் வெளிப்படுத்துதல்கள் போதுமானளவு அல்லாதாயின் எனது அபிப்பிராயத்தினை திருத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் மீது தொடர்ச்சியான நிலவுகை முடிவடைய இயலும்.

- நிதிக் கூற்றுக்களின் சட்டகம் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பாக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உகந்தனவாக மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளனவென மற்றும் வெளிப்படுத்தப்படுதல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் மொத்த சமர்ப்பிப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை செய்யும் தரப்பினர் அறிவூட்டப்பட்டனர்.

2. <u>வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பான அறிக்கை</u>

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு தொடர்பாக அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின் வாயிலாக தெரியக் கூடியதாக உகந்த நிதி அறிக்கைகள் நிதியத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிதியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முற்போந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முற்போந்த வருடத்தில் என்னால் நிகழ்த்தப்பட்ட விதப்புரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

2.2. கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்குள் எல்லைப்படுத்துதலின் வாயிலாக, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவிற்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்குள் ஈர்க்கப்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் ஆளும் குழுவின் யாதேனும் உறுப்பினர் ஒருவருக்கு நிதியத்துடன் தொடர்புபட்டு யாதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பொதுவான வர்த்தக நிலைமைகளுக்கு அப்பால் தொடர்பு உள்ளது என.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர யாதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது நிதியத்தின் ஆளும் குழுவால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொது அல்லது விஷேட பணிப்புகளுக்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்	விபரம்
	---	---
(அ)	1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 25 (2) ஆம் பிரிவு	2022 ஆம் வருடத்தில் நிதியத்தின் நிர்வாகம் பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கப் படவில்லை.
(ஆ)	(அ) இலங்கை சனநாய சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்	
(i)	நிதிப்பிரமாணம் 877 (1) (இ) மற்றும் (ஈ) பந்தி	2022 ஆம் வருடத்தில் தேசிய விளையாட்டு நிதியத்தின் பாதீடு தொடர்பாக திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்கப்படவில்லை.
(ii)	நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) பந்தி	மீளாய்வு வருடம் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கப் படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் காலவரையறைகளினுள் ஏற்புடையற்பாலனவான சட்டங்கள், விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயனபடுத்தப்படவில்லை என.

2.3 <u>ஏனைய விடயங்கள்</u>

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணைக் கொடுப்பனவு தொடர்பாக 2022 ஆம் வருட பாதீட்டின் வாயிலாக ரூ. 10,000,000 ஆனது ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்தப்பட்ட பாதீட்டின் வாயிலாக அது ரூ. 2,650,000 வரையில் குறைக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் வருடத்தில் இது

தொடர்பாக செலவழிக்கப்பட்ட உண்மைச் செலவினம் ரூ. 2,601,004 ஆனதுடன் அதில் வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெறும் விளையாட்டு வீரர்கள் இருவர் தொடர்பாக மாதாந்தம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவாக ரூ. 1,191,004 உம் அத்துடன் உயர் செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுசரணை வழங்கப்படும் விளையாட்டு வீரர்கள் தொடர்பாக வழங்கப்படும் போசணைக் கொடுப்பனவாக ரூ. 1,410,000 உம் அக அமைந்தது. 2021 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 8,215,107 செலவினத்திற்கு ஒப்பீடாக 2022 ஆம் வருடத்தில் செலவினமானது நூற்றுக்கு 68 சதவீதம் குறைந்திருந்தது. அதனடிப்படையில் முந்தைய வருடத்திற்கு ஒப்பீட்டளவில் மீளாய்வு வருடத்தில் மிகையானது விருத்தியடைந்தாலும் விளையாட்டு வீரர்களின் போசணை நிலைமையினை உயர்த்துவதன் பொருட்டு போதுமானளவு கவனமானது செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை.

(ஆ). 2022 ஆம் வருடத்தில் ஆரம்ப பாதீட்டின் பிரகாரம் ரூ. 4,600,000 ஆன பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பான நலன்புரிக் கொடுப்பனவானது திருத்தப்பட்ட பாதீட்டின் வாயிலாக வெட்டி நீக்கப்பட்டிருந்ததுடன் இதனடிப்படையில் விளையாட்டு வீரர்களின் செயலாற்றுகையின் மீது நேரடியாகவே செல்வாக்குச் செலுத்தும் பயிற்றுவிப்பாளர்களின் ஊக்குவித்தலை மேம்படுத்துவதன் மீது போதுமானளவு கவனஞ் செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை.

(இ). விளையாட்டு இயலுமைகளை மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு இருந்திருக்க வேண்டும் எனினும், 2022 ஆம் வருடத்தில் பாதீட்டின் வாயிலாக விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என்போரின் இயலுமை விருத்தி தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூ. 21,500,000 நிதியேற்பாடு திருத்தப்பட்ட பாதீட்டின் வாயிலாக ரூ. 300,000 வரையில் நூற்றுக்கு 98.6 சதவீதம் குறைக்கப்பட்டிருந்தது.

(ஈ). விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் 66 காணப்படினும் 2022 ஆம் வருடத்தில் தேசிய விளையாட்டு நிதியத்தினால் 21 தேசிய விளையாட்டுக்களுக்கு மாத்திரம் ரூ. 167,437,307 தொகையிலான நிதி அனுசரணையொன்று வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமானத்திலிருந்து ரூ. 38,388,967 அதாவது நூற்றுக்கு 23 சதவீதம் மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் தொடர்பாகவும், ரூ. 32,918,499 நூற்றுக்கு 19.6 சதவீதம் வலைப்பந்தாட்ட விளையாட்டு தொடர்பாகவும், ரூ. 15,000,000 அதாவது நூற்றுக்கு 8.9 சதவீதம் றக்பி விளையாட்டு தொடர்பாகவும் செலவழிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் செலவழிக்கப்பட்ட பெறுமானத்தில் நூற்றுக்கு 51.5 சதவீதம் 03 தேசிய விளையாட்டுக்களுக்கு மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. தேசிய விளையாட்டுக்கள் 66 காணப்படினும் 21 தேசிய விளையாட்டுக்களுக்கு மாத்திரம் நிதியத்தின் நிதிப் பங்களிப்பினை பெற்றுக்கொடுத்தமையின் காரணமாக தேசிய விளையாட்டுக்கள் தொடர்பாக தைரியமளித்தல், மற்றும் அபிவிருத்தி செய்தல் மீது தேசிய விளையாட்டு நிதியத்தினால் போதுமானளவு கவனஞ் செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை.

(உ). பாடசாலைகளுக்கிடையே விளையாட்டு நடவடிக்கைகளை எழுச்சியுறச் செய்வதன் பொருட்டு விசேட கவனஞ் செலுத்தப்பட்டிருக்கப்படாததுடன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதன் பொருட்டு மாவட்டமொன்றின் 03 பாடசாலைகளுக்கு மாத்திரம் ரூ. 300,000 செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ). பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழா என்பனவற்றை இலக்காகக் கொண்டு உயர் செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களின் இயலுமைகளை விருத்தி செய்து ஏற்புடைய போட்டிகளில் வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடன் மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், பரா விளையாட்டுக்கள், ஜூடோ, பூப்பந்தாட்டம், பாரந்துாக்கல் மற்றும் குத்துச்சண்டை ஆகிய 06 விளையாட்டுக்கள் தொடர்பாக தெரிவுசெய்துகொள்ளப்பட்ட 58 விளையாட்டு வீரர்கள் மற்றும் 32 பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மாதாந்தம் விளையாட்டு வீரன் ஒருவன் தொடர்பாக ரூ. 100,000 வீதமும் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஒருவர்

தொடர்பாக ரூ. 50,000 வீதமும் கொடுப்பனவொன்றினை மேற்கொள்ளுவதற்கு 2021 ஆம் வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2022 ஜூலை மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவினை பிரதிநிதித்துவப்படுத்திய நீச்சல், ஜிம்நாஸ்டிக், ஸ்கொஸ், மேசைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கடற்கரை வொலிபோல், கிரிக்கட் (பெண்கள்) ரக்பி மற்றும் மல்யுத்தம் ஆகிய 09 விளையாட்டுக்கள் தொடர்பாக இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுசரணையானது கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அதனடிப்படையில், பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவினை பிரதிநிதித்துவப்படுத்திய ஒட்டுமொத்த விளையாட்டு வீரர்கள் 116 பேரில் 78 பேர் அதாவது நூற்றுக்கு 67 சதவீதத்தினர் தொடர்பாக இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுசரணையானது பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கப்படவில்லை.

(எ). பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான சுயாதீன பானி 57 கிலோகிறாம் நிறை வகுப்பில் மல்யுத்தப் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கமொன்றினை வெற்றியீட்டித் தந்த மல்யுத்த வீராங்கனை உயர் செயற்சாதனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சியொன்றாக இல்லாமையின் வாயிலாக இலங்கைக்கு வெண்கலப் பதக்கமொன்றினை வெற்றியீட்டித் தந்த வீராங்கனைக்கு மேற்போந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற வேண்டிய கொடுப்பனவு மற்றும் மாதாந்த போசணைக் கொடுப்பனவு கிடைக்கப்பெறல் இழக்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுசரணையினைப் பெற்றிருந்த ஒட்டுமொத்த விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 55 சதவீத விளையாட்டு வீரர்கள் 32 பேர் மற்றும் 32 பயிற்றுவிப்பாளர்களில் 27 பேர் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கவில்லை.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு அனுசரணையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நியதிகள் உள்ளடங்கிய முறைமையியல் ஒன்றின் பிரகாரம் விளையாட்டுக்களைத் தெரிவுசெய்து கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அம் முறைமையியலை அனுமதிப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

(ஏ). மாத்தறை கம்புறுபிட்டிய குத்துச்சண்டை விளையாட்டு அரங்கு தொடர்பாக கட்டிடம் ஒன்றினை ஒழுங்கமைத்தல் மற்றும் கம்புறுபிட்டிய வொலிபோல் விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றின் பொருட்டு தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு ரூ. 9,157,992 வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த ஒப்பந்தச் செலவினம் ரூ. 7,265,483 ஆனது. எஞ்சிய தொகையான ரூ. 1,892,509 ஆனது 2022 சனவரியிலிருந்து 2023 ஜூலை வரையில் ஒரு வருடமும் ஆறு மாத காலத்தினுள் மாத்தறை மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருப்பினும் அத் தொகையினை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு மீளப் பெற்றுக்கொள்ளுவதற்கோ அல்லது வேறு அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

W.P.C. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி